ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

## அருட்சக்தி

**வாழ்க்கைச்சித்திரம் (குறிப்புகளில்)**

தொகுத்தவர்: நா.க. சுந்தரம்

| | |
|---|---|
| 1.11.1937 | ஈஸ்வர வருடம் ஐப்பசி மாதம் நரகசதுர்த்தசி தினம் காலை 8 மணிக்கு கும்பகோணம் தாலுகா 'ஆத்திக்குளம்' என்ற இடத்தில் ஸ்ரீமான் N. ராமச்சந்திரஅய்யர்– ஸ்ரீமதி ஜானகிஅம்மாள் தம்பதிக்கு 2வது குமாரராக – ஹஸ்த நக்ஷத்ரத்தில் பிறந்தார். இவருக்கு மூத்த ஸகோதரர் ஸ்ரீமான் R. ராமதுரை அய்யரும், இளைய ஸ்கோதரி ஸ்ரீமதி மீனாக்ஷியம்மாளும் உண்டு. இவரது பாட்டனார் ஸ்ரீநாகநாதர் என்பதாலும், இவர் பிறந்த பிரஸவ அறையில் 5ம் நாள் நாகப்பாம்பு வந்ததாலும் இவருக்கு "நாகராஜன்" என்ற நாமம் ஏற்பட்டது. |
| | |
| 1942 To 1952 | வலங்கைமாள் போர்டு ஸ்கூலில் ஆரம்பநிலைப்பள்ளி படிப்பு E.S.L.C (8thstd) தேறினார். இதளிடையில் 1951–ல் "ப்ரஹ்மோபதேசம்" நடைபெற்றது. |
| | |
| 1952 To 1959 | நாச்சியார் கோவில் போர்டு உயர்நிலைப் பள்ளியில் S.S.L.C படிப்பு தேறினார். |
| | |
| 1956 To 1959 | ஆத்திக்குளத்திலேயே தங்கி கும்பகோணத்தில் Technical Education படித்தார். |
| | |
| 1959 – Last | சென்னை சென்று – உத்யோகம் தேடினார் கிடைக்கவில்லை திரும்பி விட்டார் (3 மாதத்திற்குபின்) |
| | |
| 18.6.1960 | நாகரசம் பேட்டையில் Branch Post Master உத்யோகம் ஏற்பட்டது. அங்குள்ள ஒரு உதவிபெறும் பள்ளிக்கூடத்தில் Part Time Instructor உத்யோகமும் கூட. இவ்வூர் தான் இவரது |

| | |
|---|---|
| | ஆன்மீக வாழ்க்கையின் அஸ்திவாரமாக அமைந்தது. |

**வம்சாவளிபட்டிகை**

காஞ்சீபுரத்திற்கு – ஸ்ரீஆதிசங்கர பகவத்பாதர்களால் ஸ்ரீகாமாக்ஷியம்பாளின் ஆராதனைகள் செய்வதற்கு நர்மதைக் கரையிலிருந்து அழைத்துவரப்பட்ட 30 குடும்பங்கள் – ஸ்ரீவித்யோபாஸனையுடன் வேதவிற்பன்னர்களான – கௌண்டின்ய, பௌரகுத்ஸ கோத்ரத்தைச் சேர்ந்தவர்கள்: அவர்களின் 19ம் நூற்றாண்டின் கடைசியில் – மிகுந்த குடும்பங்களின் பௌரகுத்ஸ கோத்ரத்தின் வழித்தோன்றல். தஞ்சாவூர் ஜில்லா. திருப்பனைந்தாள் சேங்கனூருக்கருகில் உள்ள திருவாய்ப்பாடியில் (திருஆயர்பாடி) வாழ்ந்தவரிலிருந்து வம்சம் குறிக்கப்படுகிறது.

<u>**பிதாவம்சம் பௌரகுத்ஸ கோத்ரம்**</u>

ஸ்ரீகஸ்தூரி ரங்கசர்மா + (மனைவி) ஜானகியம்மாள்

ஸ்ரீநாகநாதசர்மா + (மனைவி) நாகலக்ஷ்மியம்மாள்

1. ஸ்ரீகோபாலக்கிருஷ்ணன் + மீனாக்ஷி

2. ஸ்ரீராமச்சந்திரய்யர் + ஸ்ரீமதி ஜானகியம்மாள்

3. குஞ்சம்மாள் + பஞ்சாபகேசய்யர்
4. ஞானாம்பாள் + சுப்ரமணிய அய்யர்
5. நடராஜன் * பட்டம்மாள்

| | | |
|---|---|---|
| ஸ்ரீராமதுரைஅய்யர் + ஸ்ரீமதி நீலாம்பாள் | **ஸ்ரீஅருட்சக்தி நாகராஜன் + ஸ்ரீமதி புவனேஸ்வரி** | ஸ்ரீமதி மீனாக்ஷி + ஸ்ரீராமச்சந்திரய்யர் |

<u>**மாதாவம்சம் வாதூலகோத்ரம்**</u>

கி.பி 1645–ஆண்டு சுமாரில் தஞ்சையில் ஆண்டுவந்த ஸ்ரீசரபோஜி மன்னர்க்கு 'பிளவை' என்ற வியாதி வந்தபோது அதை எவராலும் நீக்கமுடியாமல் அவதிப்பட்டகாலத்தில் அதனை தன் மந்த்ரதபோ வலிமையினால் 3 வேளை மருந்திலே குணமாக்கியவர் – தஞ்சை ஜில்லா

பாபனாசத்தில் வாழ்ந்துவந்த நித்யாக்னி ஹோத்ரீ சிஷ்டாசாரஸம்பள்ளர் – வாதூல கோத்ரோத்பன்னர். இவருக்கு நாச்சியார்கோவிலருகில் "ஆத்திக்குளம்" கிராமம் – ராஜாவால் இனாமாக வழங்கப்பட்டு அதில் வாழ்ந்தவர் – ப்ரஹ்ம ஸ்ரீராமஸுப்பு சாஸ்த்ரிகள், மூல புருஷனான இவர் வழியில் பேரன் வழித்தோன்றல்

ஸ்ரீஸப்தரிஷிசர்மா + துளஸியம்மாள்

ஸ்ரீகணபதி அய்யர் | மஹாலஷ்மி | ஒருபெண் (பெயர் தெரியவில்லை)

ஸ்ரீஸ்வாமிநாதய்யர்
ஸ்ரீபஞ்சாபகேசய்யர்
ஸ்ரீஸுந்தரேசய்யர் · மீனாக்ஷியம்மாள்
ஸ்ரீமதிநாகலக்ஷ்மியம்மாள் · ஸ்ரீநாகநாதசர்மா

ஸ்ரீமதி ஜானகியம்மாள்
&
ஸ்ரீராமச்சந்திரய்யர்

குறிப்பு :–மேற்படி கணபதி அய்யரின் ஸஹோதரிக்கு மாளாபுரம்) 4 பிள்ளைகளும் ஒரு பெண்ணும் உண்டு. இந்த பெண்ணின் கணவர் தான் மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே.சுவாமிநாதய்யர். (தமிழ்த்தாத்தா). முன்னோர்கள் – மாதா வம்ஸத்தைக் கூறியவர் –எனது தந்தையாரின் தாய்மாமன் – ஆத்திக்குளம் ஸ்ரீமான் P.கிருஷ்ணமூர்த்திஅய்யர். ஸதாபிஷேகத்தை எதிர்நோக்கும் இவரது தள்ளாமையிலும் இவ்விவரங்களை அளித்தமைக்கு நன்றி.

| | |
|---|---|
| 05.01.1960ல். | தந்தையார் மறைந்து விட்டார் இதுமுதல்– |
| 1060 – 1964 | மஹான் ஸ்ரீகாரைஸித்தர் அவர்களுடன் தொடர்பு ஏற்பட்டது. அவர் அருகில் உள்ள சாந்தவெளி ஸ்ரீவீர ஆஞ்ஜனேயர் ஸந்நிதியில் பல அற்புதங்கள் செய்தும், அனேக மக்களை ஈர்த்தும் அன்னதானம் முதலான செய்தும் ஸித்து விளையாடினார்கள். அவர்களது தொடர்பும் – அவரது அருளும் இவருக்கு மேலும் நல்ல ஆன்மீக உரமாக ஆனது. ஸ்ரீகாரைஸித்தர் பேரில் இவர் எழுதிய கவிதையே இவர்களது முதல் கவிதையாம். |
| 24.08.1964 | ஸ்ரீகாளரஸித்தர் பூதவுடல் நீத்தார். |
| 1964–1966 | இந்த காலமே இவரது உபாஸனைக்கு |

| | |
|---|---|
| | அஸ்திவாரமிட்டநேரம். "அருள்" 'விகஸிப்பினால் அனேக தத்வார்த்தமான. வேத புராண வாக்யங்களாக எழுதினார்கள். இவர் முன்பு இளமையில் ஸமஸ்க்ருதப்பாஷையோ. வேதமோ எதுவும் படித்தவரல்ல. இவரது வாசகங்களைக் கண்ட பெரியோர்கள் இதன் ஆழத்தைக்கண்டு மெச்சினார்கள். காஞ்சி ஸ்ரீபெரியவர்கள் இருவருமே இதனை காஞ்சியில் நேரில்கண்டு அனுக்ரஹிக்கும் பாக்யம் இவருக்குக் கிடைத்தது. |
| 04.05.1966 | இதனிடையில் – 04.05.1966ல் நாகரசம் பேட்டை ஆலய ஸ்ரீநித்யகல்யாணஸுந்தரி அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனை என்று ஒரு பெரிய மஹோத்ஸவத்தை இவரது அருள் வாக்கினைக்கொண்டே ஸகல ஏற்பாடுகளுடன் நடத்தினார். இதனை குஹானந்தமண்டலி இஞ்சிக்கொல்லை ஸ்ரீ S. குஞ்சிதபாதமய்யர் மேற்பார்வையில் பலவேத, உபாஸக அன்பர்கள் நடத்தினார்கள். இதுமுதல்– இவர் பூரண வைராக்ய சீலராகவும், தபஸ் செய்ய ஹிமாலயம் செல்ல வேணு மென்ற எண்ணத்துடனும் விளங்கிவந்தார். அன்று இரவு 12 மணி அவருக்கு ஒரு ஜோதி தரிசனம் கிடைத்ததாம். |
| 20.01.1967 | சாந்தவெளி ஸ்தலத்தில் – குஹானந்த மண்டலி ஸ்ரீவித்யா மார்த்தாண்ட ஸ்ரீவித்யா வாசஸ்பதி ப்ரஹ்மஸ்ரீC.V. ஸ்வாமி சாஸ்திரிகளின் நயன தீக்ஷையும், ஸ்பர்ச தீக்ஷையும் இவருக்கு ஏற்பட்டது. அலைபாய்ந்த மனம் சமனமானது. |
| 15.09.1967 | உத்தமதானபுரம்–அன்னுகுடியில், வாழ்ந்த ப்ரஹ்மஸ்ரீ வெங்கடசேஷைய்யா என்றவரின் சிஷ்யர் ப்ரஹ்மஸ்ரீ V.சுப்ரமண்யசாஸ்திரிகளின் குமாரத்தி ஸ்ரீமதி புவனேச்வரியுடன் விவாஹம் ஏற்பட்டது. |
| 29.1.1968 | இவர்களின் நல்லறமான இல்லறத்தில் நான்பிறந்தேன் |
| Jan. 1973 | நாகரசன்பேட்டையின் அருகில் குடமுருட்டி யாற்றின் மறுகரையில் உள்ள விடயல்கருப்பூர் கிராமத்தில் – 'கர்ணம்' வேலையில் அமர்ந்து – அங்கேயே குடி பெயர்ந்தோம். இவர்களின் ஆன்மீக உபாஸக வாழ்க்கையில் இரண்டாவது பகுதி இங்கு தான் ஸ்திரமாயிற்று. ஸ்ரீகுருஜி அவர்கள்– இந்த ஊருக்கு (அவரின் பல சீடர்கள் இருப்பதால்) சென்னையி லிருந்து அடிக்கடி வருவார்கள். அவ்வாறு – அவர்கள் ஒருதடவை வந்த சமயம் – (எங்களின் வாஸத்துக்கு பின்பு) |

| | |
|---|---|
| 15.08.1974 | மீண்டும் ஸ்ரீகுருநாதரின் தர்சனமும் அருளும் கிடைத்தது. |
| 17.08.1974 | ஸுதினமான இன்று – பிறவிப்பயனால்பெறும் பாக்யமுடைய – மந்த்ர உபதேசம்– இவருக்கு கிடைத்தது. ஸ்ரீகுருபாதுகையுடன்– ஸ்ரீகணபதி & ஸ்ரீபாலா த்ரிபுரஸுந்தரி மந்த்ரதீக்ஷை கொடுத்தார்கள். இதுமுதல்– இவரது பக்தி யோகமானது ஜப யோகமாகவும் . தப யோகமாகவும் மாறியது. இவரது லௌகீக உத்யோக வாழ்வு– இதற்கு இவருக்கு எவ்வித இடையூறும் செய்யவில்லை. ஸ்ரீகுருஜி ஊருக்கு வரும்போதெல்லாம் குருகுலவாஸம் என்றபடி பலவிதமான விஷயங்கள் அவர்களிடமிருந்து இவருக்கு கிடைத்தது. |
| 14.03.1975 | ஆனந்த வருடம் மாசி மாதம் 30 பங்குனி மாதப்பிறப்பு வெள்ளி (காரடையார் நோன்பு அன்று– ஸ்ரீவித்யா ஸௌபாக்ய பஞ்சதசீ மந்த்ரதீக்ஷை நடைபெற்றது விடயல் கருப்பூரில், |
| 27.01.1978 | தொடர்ந்து மூன்றாண்டுகளுக்குள் மஹாவித்யையை அருளி 'ஸ்ரீகாமேச்வரானந்தநாதர்' என்ற தீக்ஷாநாமம் வழங்கினார்கள். |
| 11.06.1980 | ஸ்ரீகுருஜி அவர்களின் சதாபிஷேகம் (காஞ்சீபுரத்தில்) நாங்கள் யாவரும் சென்றோம். |
| 06.09.1980 | ஸ்ரீஅனந்தாநந்தநாதர் அவர்களின் பூர்ணத்வப்ராப்த்தி. அதற்கு சென்னை சென்று வந்தார்கள். |
| 10. 1980 | விடயல்கருப்பூரில் அனைவரின் க்ரஹங்களிலும் திதிநித்யாபடங்கள் ஸ்தாபிக்கப்பட்டு 15 நாட்கள் தொடர்ந்து நவாவரணபூஜையும் ஸ்ரீவித்யாஹோமங்களும் நடந்தது. பெரும்பாலான வீடுகளில் இவரே ஹோமங்கள் செய்தார்கள். |
| 14.11.1980 | கர்ணம் உத்யோகம் அரசால் பறிக்கப்பட்டது இந்த ஆண்டில் கும்பகோணத்துக்கு ஜாகை மாற்றினோம். எனது High School படிப்பு அங்கு தொடர்ந்தது. அங்கு குடும்ப நிர்வாகத்துடன். நவாவரணபூஜை. ஸ்ரீசூக்தஹோமம். இவைகளும் செய்தார்கள். ஸ்ரீமாதவகுப்தா. ஸ்ரீவெங்கட சுப்ரமணியஅய்யர் இவர்கள் நட்புடன் ஸத்ஸங்கம் நடைபெற்றது. இங்குதான் ஸ்ரீசூக்தஹோமம் செய்து ஸ்ரீசூக்த வ்யாக்யானமும் எழுதினார்கள். |
| 5.1982 | சாந்தவெளியில் ஒரு ஸ்ரீகோதண்டராமர் சந்நிதி ஆலய கும்பாபிஷேகம் நடந்தது. அதன் பின்பு |

ஸ்ரீகுருநாதன்

| | |
|---|---|
| 31.5.1982 | காலக்ஷேபநிமித்தம் சென்னைக்கு அயனாவரத்தில்) குடும்பம் சென்றது. இந்த சென்னை வாழ்க்கை இவரின் 3வது ஸ்தானமாக உபாஸனா நிலைக்களமாக ஆனது. இங்குள்ள ஒரு கோவிலில் Accountant வேலையில் சேர்ந்தார். |
| 1982–ல் | தொடங்கி இங்கு உபாஸக உலகில் சென்னை ஸ்ரீC. V. வெங்கடேசுவரன், ஸ்ரீஸீதாராமய்யர், ஸ்ரீநடராஜய்யர் (LIC) (சிதானந்தமண்டலி) ஸ்ரீநாராயணன் (ஸ்ரீஸார் அவர்களின் பேரன்) ஸ்ரீசிவகுமார்தம்பதி, ஸ்ரீஆத்மநாதய்யர் குடும்பம் ஸ்ரீPVB.மஹாதேவ்ஜிகுடும்பம். மஹதிமண்டலி– ஸ்ரீவெங்கட்டராகவன், ஸ்ரீராமரத்னமய்யர். பெங்களூர் ஸ்ரீகாசினாதய்யர் ஏனைய மற்றவர்களின் நட்பினால் இவர் தனது உபாஸனையில் மேலும் ஒருபடி உயர்ந்தார்கள். அவர்களுக்கெல்லாம் இவரிடத்தில் ஒரு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது. மத்தியில் ஸ்ரீசிதானந்தநாதரின் நூற்றாண்டு விழா நடைபெற்றது. அதற்கான வெளியீடு நூற்றாண்டு விழாமலரில் சுமார் 52 பக்கங்கள் இவரின் **"சிதானந்த அலை"** வெளியானது குறிப்பிடத்தக்கது. |
| 1982 to 1984 | இக்காலங்களில் கோடம்பாக்கம் ஸ்ரீPVB.மஹாதேவய்யர் க்ருஹத்தில் ஸ்ரீவித்யாவகுப்பு நடத்தினார்கள். லலிதா த்ரிசதீபாஷ்யம். குருதத்வ விமர்சம், வரிவஸ்யா ரஹஸ்யம், காமகலா விலாஸம், ஸபர்யா வாஸனா விமர்சம் முதலியன படித்து விளக்கம் அளிக்கப்பட்டன. |
| 02.10.1984to 20.11.1984 | நவராத்திரி பூஜை பூர்த்தி சரஸ்வதி பூஜை தினம் பாண்டி பஜாரில் சைக்கிளின் சென்ற போது விபத்து ஏற்பட்டு கை, கால் எலும்பு முறிவு –ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை. |
| 05.01.1985 to 12.02.1985 | வரை வலங்கைமானில் வாஸம் |
| 09.1986 | இவர்களின் தாயார் காலமானார்கள் |
| 30.4.87–ல் | தனது லௌகீக உத்யோகத்தைத்துறந்தார் பரதேவதையின் அருளே – ஒரே உறுதுணையாகக் கொண்டு வாழ ஆரம்பித்தார் |
| 12.05.1987ல் | எனது தாயாரின் தாய் மாமனுடன் புதுடில்லி புறப்பட்டு 15 நாட்கள் டில்லி வாஸம் தம்பதிகளாக. |
| 25.05.1987 | ஹரித்வார் ரிஷிகேஷ் முதலிய ஸ்தலங்கள் ஸ்நான தர்சனம் நடந்தது. அவர்களது ஹிமாலய யாத்ரை தாபம் |

| | |
|---|---|
| | இதில் பூர்த்தியானதாகக் கூறினார். |
| 26.05.1987 | ஜபல்பூரில் உள்ள எனது மாமன் ஸ்ரீS.வெங்கட்ராமனுடன் அங்கு சென்று அங்கேயே வசித்துவிடலாம் என்ற எண்ணத்துடன் தங்கினார். ஆனால் தேவியின் பிரேரணை வேறுவிதமாக இருந்தது. |
| 16.08.1987 | நாங்கள் மூவரும் சென்னையே மறுபடியும் தங்க ஏற்ற இடம் எனத் தெளிந்து புறப்பட்டோம் சென்னை நோக்கி. |
| 08.1988 | என் தாத்தாவின் பீமரதசாந்தி விரிவான வகையில் ஸ்ரீநவசண்டி விதானத்துடன் சிறப்பாக கொண்டாடி னார்கள். |
| 1987-1989 | அயனாவரம் 9 திரு வி க தெரு வாஸம் அங்கு ஸ்ரீகுருஜி ஜெயந்தி, சண்டிஹோமம் என அடிக்கடி விழாக்கள் நடைபெற்றன. |
| 04.1992 | வஸந்த நவராத்திரியில் நாகரசன்பேட்டையில் நடைபெற்ற ஸ்ரீநித்யகல்யாணஸுந்தரிகோயில் மஹாகும்பாபிஷே கத்தில் இவரால் ஆதியில் ஆலயத்தில் கண்டெடுக்கப்பட்ட புராதன ஸ்ரீசக்ரத்துக்கு பிரதிஷ்டா வைபவம் செய்து அங்கு வைக்கப்பட்டது |
| 30.03.1993 | ஆங்கிரஸ வருடம் பங்குனி மாதம் 16. 17 திங்கள் மற்றும் செவ்வாய் நாகரசன்பேட்டை ஆலயத்தில் ஸம்வத்ஸரா பிஷேகத்தில் இவரால் மிக விமரிசையான அளவில் ஸ்ரீசதசண்டியாகம் நடந்தது. (இது எனது சகோதரர் ஸ்ரீசந்திரசேகரன் அவர்களின் முழு பொருப்பில் நடந்தது) அதனால் அவரது பெருமை கூடிற்று எனலாம். இதனிடையில் நான் (9-1992) புதுடில்லியில் உத்யோகம் நிமித்தம் தங்கிவிட்டேன். |
| 18.07.1993 | இவரால் தொகுக்கப்பட்ட "ஸ்ரீமஹாகணபதி மந்த்ர வழிபாடு" என்ற தமிழ்நூல் மயிலாப்பூரில் அளந்தாநந்தப்ரகாசன் மூலம் வெளியிடப்பட்டது. புத்தகம் வெளிவர ஸ்ரீPVB.மஹாதேவய்யர் முக்கிய காரணமாவார். |
| 29.07.1993ல் | ஏற்கனவே புதுடில்லியில் என் தாயாருடன் நடந்த ஜாகைக்கு இவர் வந்து சேர்ந்தார்கள் |
| 20.194-ல் | சென்னையில் நடந்த ஸ்ரீகுருஜிஜயந்தி விழாவுக்கு சென்றிருந்தோம். |
| 23.06.1994 | வியாழன் ஸ்ரீகுருமண்டலஆராதனம் விரிவாக நடைபெற்றது. இங்கு டில்லியில் பல நண்பர்கள் உபாஸகச் ரேஷ்டர்கள் என நல்ல ஸத்ஸங்கம் ஏற்பட்டுள்ளது. |

| | |
|---|---|
| 02.10.1994 | இவரால் எழுதப்பட்ட "ஸ்ரீமஹாலக்ஷ்மி அஷ்டோத்திர சதநாமாவளி தமிழுரை' புத்தகம் வெளியிடப்பட்டது. ஸத்ஸங்கத்தாரால், பொருளுதவி செய்தவர் திரு M.B.ஆத்ரேயா அவர்கள். |
| 06.11.1994 | ஆத்திலேயே சுருக்கமான முறையில் ஆத்மார்த்தமாக ஒரு ஸ்ரீசண்டிஹோமம் நடத்தினார்கள். அது முதல் அருகில் "வைசாலியில் ஸ்ரீகாமேஸ்வரமண்டலியினரின் ஸ்நேகத்தால் தினசரியும், வாராந்திர மாகவும், 'ஸத்ஸங்கம்' நடைபெற்று வருகிறது. |
| 26.03.1995 | எனது திருமணம் சென்னையில் நடந்தது. அங்கு கலிபோர்னியாவில் இருக்கும் குஹானந்த மண்டலி ஸ்ரீமதி ராஜலஷ்மிஅம்மாளைச் சந்தித்து உரையாடினார்கள் (அவர்களை முன்பே தெரியும்) |
| 11.11.1995 | வைசாலி ஸ்ரீV.ஸுப்ரமணிய அய்யர் க்ருஹத்தில் குருமண்டலம் விரிவான அளவில் போட்டு பூஜை நடத்தினார்கள். |
| 29.01.1996 | ஆத்தில் தை கார்த்திகை ஸ்ரீகுருஜிஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது |
| 22.08.1996 | புதுடில்லி வைசாலி Extn– ல் காமேஸ்வரானந்த மண்டலி – ஸ்ரீமான் V. சேதுராமய்யரின் ஷஷ்டியப்த பூர்த்தியை 4 தினங்கள் – விரிவான ஸ்ரீசதசண்டியாகமாக நடத்தினார்கள் |
| 13.10.1996 | ஸ்ரீசரத் நவராத்திரி – வைசாலியில் திரு V.ஸுப்ரமணிய அய்யர் வீட்டில் நவராத்ரி வார்ஷிக சதசண்டி யாகமாகவும், விஜயதசமிதினம் அதிகாலை – வாஞ்சா கல்பலதா ஹோமத்துடனும் நடத்திவைத்தார். |
| 08.11.1996 | வெள்ளி 59 வயது நிறைவெய்துகிறது. இதற்காக "ரிதம்பரா ஞானஸபா" "மலர்" தயாரித்து வெளியிடுகிறது. இதுவரை எனது தந்தையான ஸ்ரீஸத்குருநாதர் வரலாற்றை சுருக்கமான குறிப்புகளில் கண்டோம். புகழுடன் கூடிய வரலாறு தொடர வேண்டுகிறோம். |

**சுபம்**